## செப்டம்பர் - 22 - வெள்ளி

### முதல் வாசகம் : 1 திமோத்தி 6: 2 – 12

அன்பிற்குரியவரே! நம்பிக்கை கொண்டோரைத் தலைவர்களாகக் கொண்டுள்ள அடிமைகள், அவர்களும் சகோதரர்கள்தானே என்று, மதிப்புக் கொடுக்காதிருத்தல் தவறு. மாறாகத் தங்கள் நற்செயலால் பயன்பெறுவோர் நம்பிக்கை கொண்டவர்களும் அன்பர்களுமாய் இருப்பதால், இன்னும் மிகுதியாக அவர்களுக்குப் பணி செய்யவேண்டும். இவற்றை நீ கற்பித்து ஊக்குவி.மாற்றுக் கொள்கைகளைக் கற்பித்து, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நலம்தரும் வார்த்தைகளுக்கும், இறைப்பற்றுக்குரிய போதனைக்கும் ஒத்துப் போகாதவர்கள்,தற்பெருமை கொண்டவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் விவாதங்களிலும் சொற்போர்களிலும் பைத்தியம் கொண்டவர்கள். பொறாமை, போட்டி மனப்பான்மை, பழிச்சொல், பொல்லாத ஊகங்கள், ஓயாத மோதல்கள் முதலியன இவற்றிலிருந்தே உண்டாகின்றன. உண்மையை இழந்தவர்களிடமும் சீரழிந்த மனத்தைக் கொண்டவரிடமும் இவை காணப்படுகின்றன. இறைப்பற்று பெரும் ஆதாயம் தருவதுதான் ஆனால் மனநிறைவுள்ளவர்களுக்கே தரும். உலகத்திற்கு நாம் எதையும் கொண்டு வந்ததில்லை. உலகத்தை விட்டு எதையும் கொண்டு போகவும் முடியாது.எனவே, உணவும் உடையும் நமக்கு இருந்தால் அவற்றில் நாம் மனநிறைவு கொள்வோம்.செல்வத்தைச் சேர்க்க விரும்புபவர்கள் சோதனையாகிய கண்ணியில் சிக்கிக் கொள்கிறார்கள் அறிவீனமான, தீமை விளைவிக்கக்கூடிய பல்வேறு தீய நாட்டங்களில் வீழ்ந்து விடுகிறார்கள். இவை மனிதரைக் கேட்டிலும் அழிவிலும் ஆழ்த்துபவை. பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர். அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறழ்ந்து திரிந்து பல வேதனைகளைத் தாங்களாகவே தங்கள்மேல் வருவித்துக் கொள்கிறார்கள்.கடவுளின் மனிதனாகிய நீ, இவற்றிலிருந்து தப்பி ஓடு. நீதி, இறைப்பற்று, நம்பிக்கை, மனஉறுதி, பணிவு ஆகியவற்றை நாடித்தேடு.விசுவாச வாழ்வு என்னும் போராட்டத்தில் ஈடுபடு. நிலைவாழ்வைப் பற்றிக்கொள். அதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறாய். அதனை முன்னிட்டே பல சாட்சிகள் முன்னிலையில் விசுவாசத்தைச் சிறப்பாக அறிக்கையிட்டாய்.

**பதில்பாடல் :** ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களதே

### நற்செய்தி : லூக்கா 8 : 1 - 3

அக்காலத்தில் இயேசு நகர் நகராய், ஊர் ஊராய்ச் சென்று இறையாட்சிபற்றிய நற்செய்தியைப் பறைசாற்றி வந்தார். பன்னிருவரும் அவருடன் இருந்தனர். பொல்லாத ஆவிகளினின்றும் நோய்களினின்றும் குணமான பெண்கள் சிலரும், ஏழு பேய்கள் நீங்கப்பெற்ற மகதலா மரியாவும் ஏரோதுவின் மாளிகை மேற்பார்வையாளர் கூசாவின் மனைவி யோவன்னாவும் சூசன்னாவும் மேலும் பல பெண்களும் அவரோடு இருந்தார்கள். இவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்துவந்தார்கள்.

**தியானம்:** தன்னாலே உருவாக்கப்பட்ட மனிதனோடு தொடக்கத்திலிருந்து எமது பரலோக தகப்பன் நேரடியாகப் பேசியிருக்கின்றார். காலப்போக்கில் தமது செய்தியை எம்மிடையே பகிர்ந்துகொள்ள, எம்மோடு உறவாட, தமது தூதர்களை இறைவாக்கினர்களாகவும், கருவிகளாகவும் பயண்படுத்தியுள்ளதனை நற்செய்தி ஏடுகளில் காணலாம். எனினும், தமது நற்செய்தியை அறிவிக்க மிகச்சாதாரனமானவர்கள் எனக்கருதப்படும் எம்மையும் இறைவன் பயன்படுத்த முடியும் என்பதனை இன்றைய நற்செய்தி எமக்கு வேறுவிதமாகப் படிப்பித்து எம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றது. இயேசு நாடோடிப் போதகராகச் செயல்பட்டதால் அன்றைய மறைநூல் அறிஞர், சட்ட வல்லுனர்கள் போன்று உயர் பதவி வகிக்கவில்லை. தச்சன் சூசையின் மகனெனக் கருதப்பட்டவருக்கு, சமுதாயம் உயரிடம் கொடுக்கவில்லை. துணையாகச் சென்றவர்கள் தலைசிறந்த படிப்பாளிகள் அல்ல. மாறாக மீன்பிடித்தல், வரிதண்டுதல் போன்ற இழிவான தொழில்களே அவர்களது பிழைப்புக்கு வழியாயிருந்தன. இவ்வாறான சூழலில் போதித்த இயேசுவோடு சிலபெண்களும் துணையாகச் சென்றனர் (லூக்கா 8:2). அன்றைய யூத சமூகக்கட்டமைப்பில் பெண்கள் அதுவும் நோயாளிகள் மற்றும் பேய்பிடித்தவர்கள் சமுதாயத்தில் தாழ்நிலையாளர்களாகக் கருதப்பட்டதாக நற்செய்தி ஏடுகளின் வேறிடங்களில் காணலாம். தமது நற்செய்தியைப் பரப்புவதற்குக் கடவுள் தேர்ந்துகொள்கின்ற மனிதர் யாரென்பதல்ல முக்கியம். நம் ஒவ்வொருவரையும் எல்லாம் வல்ல இறைவன் தமது நற்செய்தியின் தூதுவராகத் தெரிந்துகொள்ள, பயன்படுத்தமுடியும் என்பதே உண்மை. நற்செய்தியைப் பரப்புவதற்கு சமூக அந்தஸ்தோ, விசேடத்துவம் நிறைந்த கல்வியோ, அல்லது (லூக்கா 8:3) தகுதியோ தேவையில்லை. மாறாக ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவை எமது இரட்சகராகவும், மீட்பராகவும் உள்ளத்திலும், இதயத்திலும் பகிரங்கமாக ஏற்று ஆண்டவர் இயேசுவை அன்புசெய்வதுபோல் அயலவரையும் அன்பு செய்யவேண்டும். ஆண்டவர் இயேசுவோடு வழிநடக்க நாம் தயாராக இருக்க எமது உடமைகள் அனைத்தையும் கொண்டு (லூக்கா 8:3)அவருக்குப் பணிவிடை செய்யவேண்டும். இத்தகைய மனநிலை நம்மிடம் இருந்தால், நாமும் நற்செய்தி அறிவிக்கத் தகுதியுடையவர்கள் ஆகிவிடுவோம் என்பதனையே இன்றைய நற்செய்தி எமக்குத் தருகின்ற செய்தியாகும்.